[9th August 1966

THE HON. SRI P. KAKKAN : (a) & (b) A statement [a] is placed on the Table of the House.

திரு. து. ப. அழகமுத்து : ஸார், இந்த அறிக்கையின்படி, முசிரி, பெரம்பலூர் இந்த இடங்களில் 1963-64-ல் மொத்தம் 638 பம்பு செட்டுகளுக்கு கடன் கொடுக்கப்பட்டு, 579 பம்புசெட்டுகளுக்குத் தான் இணைப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. 1964-65-ல் 1,033 பம்பு செட்டுகளுக்கு கடன் கொடுக்கப்பட்டு இதுவரை 483 பம்புசெட்டு களுக்கு மட்டும் மின்சார இணைப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. இவ்விதம் மின்சார இணைப்புக்கள் காலதாமதம் ஆவதால் பயன் படுத்தாமலேயே இதற்கென்று வாங்கிய கடனைத் திரும்பக் கட்டு கின்ற தவணை வருகின்ற நிலைமையிருக்கிறது. காரணம் ஒரு டிப்பார்ட்மெண்டோடு இன்னொரு டிபார்ட்மெண்ட் கோ-ஆர்டி னேஷன் இல்லாமல் இருக்கிறது. இந்தச் சிக்கலை தீர்ப்பதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளும் என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : ஒரு இலாகாவுக்கு இன்னொரு இலாகா வோடு கோ-ஆர்டினேஷன் இல்லை என்று சொல்வது சரியல்ல. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மின்சார போர்ட் தலைவரிடம் இதிலுள்ள கஷ்டத்தைப் பற்றியும், காலதாமதத்தையும் எடுத்துச் சொல்லி, இதைத் தவிர்க்க முன் வருவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். மணி : பெரம்பலூர் வட்டத்தில் பம்புசெட்டுகளுக்கு கடன் கொடுப்பதை தற்காலிகமாக நிறுத்தியிருக்கிறார்கள். உணவு உற்பத்தியைப் பெருக்கவேண்டும் என்று சொல்லுகின்ற இந்த நேரத்தில் அரசாங்கம் கடன் கொடுப்பதற்கு ஏன் தயங்கு கிறது ?

கனம் திரு. பூ. கக்கன் : கனம் அழகமுத்து அவர்கள் ஏற்கனவே கொடுத்திருக்கின்ற பம்புசெட்டுகளுக்கே ஏன் மின்சார இணைப்புக் கொடுக்கப்படவில்லை என்று கேட்கிறார்கள். இன்னும் புதிதாக பம்புசெட்டுகள் கொடுத்தால் இந்தக் குறை இன்னும் ஜாஸ்தியாகும். கொடுக்கப்பட்ட மோட்டார்களுக்கு இணைப்பு கொடுத்ததற்குப் பின்னால் கடன் கொடுப்பதைப்பற்றி பரிசீலனை செய்யப்படும்.

சுப்பையா நகர்

** 264 கேள்வி.—திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :* கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திண்டிவனம் வட்டம், கிளியனூரை அடுத்த தானமா னியத்தில் சுப்பையா நகர் என்பதொன்றை கனம் சுகாதார அமைச்சர் திறந்து வைத்தது உண்மையா ?

(இ) ஆமெனில், அதன் முழு விபரம் என்ன ?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) ஆம்.

---

[a] Printed as Appendix IV on page 991.

9th August 1966]

(இ) திண்டிவனம் தாலுகாவிலுள்ள கிளியனூர் கிராமத்தின் குக்கிராமமாகிய தேவமானியத்தில் 'சுப்பையா நகர்' என்ற பெயரில் கிளியனூர் ஹரிஜன நிலக்குடியேற்றக் கூட்டுறவுச் சங்கத்தை 11-1-1965-ல் பொது நல அமைச்சர் திறந்துவைத்தார். அச்சங்கத்தின் உறுப்பினர்கள் 20 பேருக்கு ஒவ்வொருவருக்கும் 4 ஏக்கர் வீதம் இடைக்கால நில ஒப்படை ஆணைகளை அமைச்சர் வழங்கினார்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : ஒரு கிராமத்திற்குப் பெயர் வைக்கும்போது, அங்கேயிருக்கக்கூடிய வீடுகளில் குடியிருக்கின்றவர்களுடைய எண்ணத்தை அனுசரித்து பெயர் வைப்பார்கள். இந்த இடத்தில் கிராமம் என்று கூட இல்லாத நிலையில் 'சுப்பையா நகரம்' என்று பெயர் வைத்திருக்கிறார்கள். அந்த இடத்தில் இப்படிப்பட்ட ஊரோ அல்லது வீடுகளோ இல்லாமல் இப்படி பெயர் வைக்கக் காரணம் என்ன ?

கனம் திரு. பூ. கக்கன் : அங்குள்ள மக்கள் அபிப்பிராயப்படி பெயர் வைக்கிறார்கள். இந்த இடத்தில் வேண்டுமென்றே சுப்பையா நகர் என்று பெயர் வைத்திருப்பதாகத் தெரியவில்லை.

திரு. எஸ். ஜே. ராமசாமி : இந்த சுப்பையா என்பவர் அரசியல் தியாகியா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : அவசியமா, அவசியமில்லையா என்பதைப்பற்றி லான்ட் காலனிஸேஷன் செய்யப்போகும் மக்களுடைய மனதைப் பொறுத்தது.

திரு. எஸ். ஜே. ராமசாமி : நான் கேட்டது அதுவல்ல. . .

திரு. இராம. அரங்கண்ணல் : இந்த நகரத்திற்கு பெயர் வைக்கப்பட்டிருக்கின்ற 'சுப்பையா' என்பவர் அரசியல் தியாகியா, அவர் யார் ?

கனம் திரு. பூ. கக்கன் : அந்த சமயத்தில் அங்கு கலெக்டராக வேலை பார்த்து வந்தவர்.

திரு. இராம. அரங்கண்ணல் : ஸார், ஏற்கனவே சென்னை மாநகரத்தில் ராஜரத்தினம் என்பவருடைய பெயரை வைத்த நேரத்தில் அரசாங்கம் ஒரு உத்தரவிட்டிருந்தது. அதாவது சர்க்கார் அதிகாரிகளுடைய பெயர்களை பொது இடங்களுக்கு வைக்கக்கூடாது என்று உத்தரவிட்டு இருந்தது. இதில் அந்த உத்தரவு அனுசரிக்கப்பட்டதா ?

கனம் திரு. பூ. கக்கன் : அந்தக் தகவல் இப்போது என்னிடம் இல்லை. .

கனம் சபாநாயகர் : யார் இந்த இடத்திற்கு எல்லாம் பெயர் வைப்பது ? யாருக்கு இந்த அதிகாரம் இருக்கிறது ?

திரு. இராம. அரங்கண்ணல் : அந்தந்த ஊர்க்காரர்களே பெயர் வைக்கிறார்கள். ஆனால் சர்க்கார் அதிகாரிகளுடைய பெயர் இருந்தால் அதை அனுமதிக்கக்கூடாது என்று சர்க்கார் இதற்கு முன்னால் உத்தரவிட்டிருக்கிறார்கள். . .

கனம் சபாநாயகர் : இதற்கென்று தனியாக ஏதாவது சட்டம் இருக்கிறதா ?

திரு. இராம. அரங்கண்ணல் : இதற்கு முன் சென்னைமா நகரத்தில் ராஜரத்தினம் என்பவருடைய பெயர் வைத்த காலத்தில். .

கனம் சபாநாயகர் : அது வேறு விஷயம். நான் கேட்பது என்னவென்றால் சாதாரண கிராமங்களில் அங்கேயிருக்கின்றவர்கள் என்னென்ன பெயரையோ வைத்துக்கொள்கிறார்கள். ஏதாவது ஒரு ஊரில் ' சபாநாயகர் நகர் ' என்று பெயர் வைத்துக் கொண்டால் நான் என்ன பண்ணுவது? (திரு. இராம அரங்கண்ணல்: சபாநாயகர் அவர்களை அதிகாரி என்று எடுத்துக் கொள்வதற்கில்லை.) இதற்கென்று ஏதாவது சட்டம் இருக்கிறதா என்று தான் கேட்டேன்.

திரு. இராம. அரங்கண்ணல் : ஸார், சர்க்கார் அதிகாரிகளுடைய பெயர்களைப் பொது இடங்களுக்கு வைக்கக் கூடாது என்று சர்க்கார் முன்பு உத்தரவிட்டிருக்கிறது. அப்படி யாராவது அதிகாரிகளுடைய பெயர்களை உபயோகப்படுத்துவதாக இருந்தால் அதை அங்கிருக்கின்ற சர்க்கார் அதிகாரி தடுத்திருக்க வேண்டும். அந்த முறையில் சுப்பையா என்பவர் மாவட்ட கலெக்டராக இருந்திருந்த நேரத்தில் தன் பெயரை வைக்கப்போகிறார்கள் என்பதைத் தெரிந்து அதை மறுத்திருக்கவேண்டும். அந்த முறையில் சர்க்கார் உத்தரவு இதில் மீறப்பட்டிருக்கிறதா என்பது தான் என்னுடைய கேள்வி.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : ஸார், இந்த இடத்தில் சர்க்கார் பட்டா வழங்கும்போது எந்தவிதமான பெயரும் போடப் படவில்லை. பட்டா எல்லாம் வழங்கிய பின்னால் அங்குள்ள ஜனங்கள் ஜில்லா கலெக்டர் அவர்களுடைய பெயரை வைக்க வேண்டும் என்று விரும்பி அவ்விதம் வைத்திருக்கிறார்கள். பட்டா வழங்குவதற்கு முன் சுப்பையா நகர் என்று பெயர் போட்டு கொடுக்கவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அரிசன சேவக் சங்கம்

*** 265 கேள்வி—திரு. து. ப. அழகமுத்து :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா--

(அ) சென்னையிலுள்ள ஹரிஜன சேவக் சங்கம், தாழ்த்தப்பட்ட வகுப்பினர் சங்கம் ஆகிய ஒவ்வொன்றிற்கும் 1965-66-க்கு அரசாங்கத்தால் எவ்வளவு நிதி உதவி அளிக்கப்பட்டது ?

(இ) மேற்படி நிறுவனங்கள், அளிக்கப்பட்ட நிதி உதவியை எவ்வாறு செலவு செய்தன என்ற விவரம் சபைமுன் வைக்கப்படுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) & (இ) சபைமுன் விவர அறிக்கை ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

---

* 991–993வது பக்கங்களில் ஐந்தாவது இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.